


# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ பிப்ரவரி. 10, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 127 ❖ ரூ.10


### மாநிலங்களவையில் 'மோடியும் அதானியும் கூட்டு' என முழக்கம்

# சாடல்

## சேற்றை வாரி இறைக்க இறைக்க தாமரை மலரும். எதிர்க்கட்சிகள் சேற்றை வாரி இரைத்து தாமரையை வளரச் செய்வதால் நாங்கள் நன்றி கூறுகிறோம்; பிரதமர் மோடி

புதுடெல்லி, பிப். 10–

"நீங்கள் சேற்றை வாரி இறைக்க இறைக்க தாமரை மலரும்" என்று எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு மாநிலங்களவையில் பிரதமர் நரேந்திர மோடி பதிலளித்துள்ளார்.



குடியரசுத் தலைவர் உரைக்குநன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின் மீதுபிரதமர் நரேந்திர மோடி நேற்று மாநிலங்களவையில் உரையாற்றினார். அதானி விவகாரத்தில் விசாரணை வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கடுமையான கோஷங்களுக்கு இடையே பிரதமர் மோடி உரையாற்றினார். 'மோடியும் அதானியும் கூட்டு' (மோடி, அதானி பாய், பாய்) என்று பொருள்படும் வகையில் எதிர்க்கட்சியினர் கோஷங்கள் எழுப்பினர்.

பிரதமர் மோடி தனது உரையில் பேசுகையில்: "அவையில் சில உறுப்பினர்களின் நடத்தையும், அவர்களின் பேச்சு தொனியும் ஒட்டுமொத்ததேசத்திற்கே ஏமாற்றத்தை அளிக்கிறது. நான் அந்த நபர்களுக்கு ஒரு விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். சேற்றை வாரி இறைக்க இறைக்க தாமரை மலரும். எதிர்க்கட்சிகள் சேற்றை வாரி இரைத்து தாமரையை வளரச் செய்வதால் நாங்கள் நன்றி கூறுகிறோம்.

மக்களுக்கு மத்திய அரசு எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஜன் தன், ஆதார், மொபைல் இணைப்பு மூலம் 20 லட்சம் கோடி ரூபாய் பயனாளர்களின் உரிய கணக்குகளுக்கு சென்றுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு எல்லாமே வாய்ஜாலம் தான். 2014 வரை நாட்டில் பாதிக்கும் மேற்பட்ட மக்களுக்கு வங்கி சேவை வசதி இல்லை. ஆனால், கடந்த 9 ஆண்டுகளில் பாஜக அரசு 48 கோடி வங்கிக் கணக்குகளை தொடங்கிக் கொடுத்துள்ளது.

நாங்கள் எந்த தரப்பு மக்களையும் விட்டுவிடவில்லை. பல ஆண்டுகளாக பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரம் பற்றியாரும் அக்கறை இல்லாமல் இருந்தனர். நாங்கள் அவர்களுக்கான நலத்திட்டங்களுக்கு அதிக முன்னுரிமை கொடுத்து வருகிறோம். நாடெங்கிலும் 110 மாவட்டங்களை தேர்ந்தெடுத்து அங்கு கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு போன்ற அடிப்படை வசதிகளில் சிறப்பு கவனம் செலுத்தினோம். இதன் வாயிலாக 3 கோடிக்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் பயன்பெற்றுள்ளனர்.

பாதுகாப்புத்துறையில் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. ரூ.1 லட்சம் கோடி மதிப்பிலான ராணுவ தளவாடங்களை நாம் ஏற்றுமதி செய்கிறோம். அதேபோல், நமது விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் திறமையால் உலக மருந்து துறை மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது. கரோனா பெருந்தொற்று உலகை ஆட்கொண்ட போது பிற நாடுகளின் தடுப்பூசிகளை இந்திய சந்தையில் விற்பனை செய்வதற்கு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. நமது விஞ்ஞானிகளை இழிவுப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், நமது இந்திய விஞ்ஞானிகள் நமது நாட்டிலேயே தடுப்பூசிகளை உருவாக்கி 150 நாடுகளுக்கு அதன் பலன்களை வழங்கியுள்ளனர்.

ஒரு காங்கிரஸ் பிரதமர் 356 சட்டப் பிரிவை 50 முறை பயன்படுத்தி இருக்கிறார். அவர் வேறு யாருமல்ல இந்திரா காந்தி.

காந்தி, நேரு குடும்ப பெயரில் 600–க்கும் மேற்பட்ட திட்டங்கள் உள்ளன. ஆனால், அவர் வழி வந்தவர்கள் அவரின் பெயரை பின்னால் சேர்த்துக்கொள்ள ஏன் தயங்குகிறார்கள்? ஜவஹர்லால் நேரு சிறந்த மனிதர். அப்படியிருக்க நேரு என்ற பெயரைப் பயன்படுத்துவதில் அவர்களுக்கு என்ன அவமானம் நேர்ந்துவிடும்?" என்று பிரதமர் மோடி தனது நீண்ட உரையில் பல்வேறு விஷயங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் முத்திரை பதிக்கும் திட்டங்கள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் இறையன்பு, அரசுத்துறை செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திட்டங்களை செயல்படுத்துவதில் அதிகாரிகள் சுனக்கம் இன்றி விரைந்து செயல்பட வேண்டும் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை, பிப்.10–

சிறப்பு திட்ட செயலாக்க துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார். சென்னை, தலைமை செயலகத்தில் சிறப்பு திட்ட செயலாக்க துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர்கள், ஐ ஏ எஸ் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், திட்டங்களை செயல்படுத்துவதில் அதிகாரிகள் விரைந்து செயல்பட வேண்டும். தினசரி காலை சிற்றுண்டிகள் வழங்குவதன் மூலமாக பல்லாயிரம் குடும்பங்கள் நம்மை வாழ்த்தி வருகின்றன. மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் கோடிக்கணக்கானோர் பயனடைந்துள்ளனர். இலவச மின் இணைப்பு பெற்ற விவசாயிகள் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர். மாதந்தோறும் ரூ.1000 பெறக்கூடிய மாணவிகள் பாராட்டி வருகின்றனர். இவை அனைத்தும் நம் கண்ணுக்கு முன்னால் தெரியக்கூடிய மகிழ்ச்சிகள்.

இதேபோல் அனைத்து திட்டங்களாலும் பயன்பெறுவோர் மகிழ்ச்சியடைந்தால், 8 கோடி மக்களும் பாராட்டும் அரசாக இந்த அரசு மாறிவிடும். இது உங்கள் கைகளில் தான் இருக்கிறது. அறிவிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதில் சுனக்கம் இருக்கக்கூடாது. ஒரு திட்டத்திற்கு ஏதாவது ஒர் இடத்தில் சிறு தடங்கல் இருக்கலாம். அந்த தடங்கல் உங்களுக்கு தான் தெரியும். அதனை அதிகாரிகள் மத்தியில் கூட்டத்தை கூட்டி திட்டத்தை செயல்படுத்துவது உங்கள் கைகளில் தான் உள்ளது. திட்டங்கள் எந்த அளவில் செயல்பட்டு வருகிறது என்பதை நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும். 2023க்குள் அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்பட்டது என்ற நிலையை எட்டியாக வேண்டும் என்று கூறினார்.

## அமெரிக்காவில் சுட்டு வீழ்த்தப்பட்ட சீன உளவு பலூன் இந்தியாவையும் உளவு பார்த்ததாக தகவல்

டெல்லி பிப்.10–

சீனபலூன்அமெரிக்கா மட்டுமின்றி இந்தியா உள்ளிட்ட 5 நாடுகளை உளவு பார்த்ததாக அமெரிக்க ஊடகங்களில் பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் மவுண்டானா மாகாணத்தில்உள்ள அணு ஆயுத ஏவுதளத்தின் மேல் சீன உளவு பலூன் ஒன்று பறந்த நிலையில், அதை அமெரிக்க ராணுவம் சுட்டு வீழ்த்தியது. அட்லாண்டிக் கடலில் விழுந்த பலூனின் பாகங்களை அமெரிக்க கடற்படை சேகரித்து ஆய்வு செய்து வருகிறது. இதனிடையே அது உளவு பலூன் அல்ல என்றும், வானிலையை கண்காணிப்பதற்காக அனுப்பப்பட்ட பலூன் வழிமாறி சென்றுள்ளதாகவும் சீனா விளக்கமளித்தது.

மேலும் அந்த பலூன் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்தது. ஆனால் அந்த பலூன் சீன விமானப்படையால் இயக்கப்பட்டது



என்றும், அது உளவு பார்ப்பதற்காகவே அனுப்பப்பட்டதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது. இந்த நிலையில் சீன பலூன் அமெரிக்கா மட்டுமின்றி இந்தியா, ஜப்பான், வியட்நாம், தைவான், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளையும் உளவு பார்த்துள்ளதாக அமெரிக்க ஊடகங்களில் பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது. அதே சமயம் கடந்த ஜனவரி மாதம் வங்கக் கடலில் இந்தியாவின் முக்கிய ராணுவ தளவாடங்கள் நிலை நிறுத்தப்பட்டுள்ள இடங்களின் மீது வெள்ளை நிற பலூன் பறந்ததாகவும், இது அமெரிக்காவில் சுட்டு வீழ்த்தப்பட்ட பலூனாக இருக்கலாம் எனவும் அந்தமானில் உள்ள உள்ளூர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு**

### திருவப்பூர் முத்துமாரியம்மன் கோயில்

## பூச்சொரிதல் விழா மற்றும் ஜல்லிக்கட்டு 26ந்தேதி நடக்கிறது ஏற்பாடுகள் தீவிரம்

புதுக்கோட்டை, பிப். 10–

புதுக்கோட்டை அருகே உள்ள திருவப்பூரில் மிகவும் புகழ் பெற்ற முத்துமாரியம்மன் திருக்கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஆண்டுதோறும் மாசி தேரோட்டம் பூச்சொரிதல் விழா, காப்புகட்டுதலுடன் தொடங்கி நடைபெறுவது வழக்கம்.

வழக்கம்போல் இந்த ஆண்டும் வருகிற 26–ந் தேதி பூச்சொரிதல் விழா நடைபெற உள்ளது. முன்னதாக பூச்சொரிதல் விழாவை முன்னிட்டு அன்று காலை திருவப்பூர் கவிநாடு திடலில் மாபெரும் ஜல்லிக்கட்டு விழா நடைபெற உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திலேயே மிகவும் பிரசித்தி பெற்ற திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலின் மாசிப் பெருந்திருவிழா கீழ்க்கண்ட விபரம் வருமாறு: பிப்ரவரி 26.02.2023 மாசி 14 ஞாயிற்றுக்கிழமை பூச்சொரிதல் விழா, 05 .03.2023 ஞாயிற்றுக்கிழமை மாசி 21 அம்மனுக்கு காப்பு கட்டுதல், கொடியேற்றம். 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை மாசி28 பொங்கல் திருவிழா. 13 03.2020 மாசி 29 திங்கட்கிழமை மாசிப் பெருந் திருவிழாவை முன்னிட்டு திருத்தேரோட்டம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை. 14.03.2020 மாசி 27 செவ்வாய்க்கிழமை திருவிழா தொடர்கிறது. 21.03.2020 பங்குனி 7 திங்கட்கிழமை காப்பு களைந்து, கொடி இறக்கப்பட்டு விழா நிறைவு பெறுகிறது.

மார்ச் 13ஆம் தேதி 12ஆம் வகுப்புக்கு அரசு பொது தேர்வு நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்படும். அன்றைய தினத்தில் அரசு பொதுத்தேர்வு வழக்கம் போல் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.




# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## ராயக்கோட்டை திமுக பொதுக்கூட்ட வன்முறை வழக்கில் முல்லைவேந்தன், 8 பேர் விடுதலை: 20 ஆண்டுகளுக்கு பின் தீர்ப்பு



கிருஷ்ணகிரி, பிப்.10–

ராயக்கோட்டை திமுக பொதுக்கூட்ட வன்முறை வழக்கில் முன்னாள் அமைச்சர் முல்லைவேந்தன் உட்பட 9 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையில் கடந்த 2003-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் தேதி, திமுக பொதுக்கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் பங்கேற்க வந்த முன்னாள் அமைச்சர் முல்லைவேந்தனை வரவேற்று கட்சியினர், ராயக்கோட்டை அண்ணாசிலை அருகே பட்டாசுகள் வெடித்தனர். அப்போது, எதிர்பாராதவிதமாக பட்டாசு வெடித்து சிதறியது. இதில், ரஜினி ரசிகர் மன்ற கவுரவ தலைவர் தஸ்தகிரி (20) படுகாயங்களுடன் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து திமுக பொதுக்கூட்டத்தில் வன்முறை சம்பவம் அரங்கேறியது. இதில் அரசு வாகனங்கள், கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. இது குறித்து, தருமபுரி மாவட்டம், நம்மாண்டஹள்ளியை சேர்ந்த மாதேசன் அளித்த புகாரின் பேரில், முன்னாள் அமைச்சர் முல்லைவேந்தன், திமுக முன்னாள் எம்எல்ஏ செங்குட்டுவன், நகர செயலாளர் எஸ்.கே.நவாப், நாராயணமூர்த்தி உட்பட 10 பேர் மீது ராயக்கோட்டை போலீஸார், பொது சொத்துக்கு சேதம் விளைவித்தல் உட்பட பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர். வழக்கு பதிந்த 10 பேரில் முருகேசன் என்பவர் ஏற்கெனவே இறந்துவிட்டார்.

இவ்வழக்கு விசாரணை, கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இவ்வழக்கு விசாரணை முடிந்து, நீதிபதி சக்திவேல் நேற்று (பிப்.9) தீர்ப்பளித்தார். அதில், குற்றம்சாட்டவர்களுக்கு எதிராக போதிய ஆதாரங்கள் இல்லாததால் அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் முல்லைவேந்தன், திமுக முன்னாள் எம்எல்ஏ செங்குட்டுவன், நகர செயலாளர் நவாப் உட்பட 9 பேர் விடுதலை என்று கூறப்பட்டு இருந்தது.

இவ்வழக்கில் விடுதலை பெற்றதை தொடர்ந்து, முன்னாள் எம்எல்ஏ செங்குட்டுவன் தலைமையில் திமுகவினர், கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள அண்ணாசிலைக்கு மாலை அணிவித்தும், பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

## செந்துறை அருகே ரூ.8.15 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி துவக்கி வைத்தார்



அரியலூர் பிப்.10–

அரியலூர் அருகே குழுமூரில், எட்டுகோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பில் சாலை மேம்பாட்டுப் பணிகளை, அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், குழுமூரில் நெடுஞ்சாலைத் துறை நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டம் மூலம், குழுமூர்–அயன்தத்தனூர் சாலை தரம் உயர்த்தும் பணியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி துவக்கி வைத்தார்.

குழுமூர் - அயன்தத்தனூர் சாலை, தரம் உயர்த்துவதன் மூலம், வங்காரம், அயன்தத்தனூர், குழுமூர், சித்துடையார், வஞ்சினாபுரம், நல்லநாயக்கபுரம், அங்கனூர், சன்னாசிநல்லூர், முல்லையூர், ஆர்.எஸ்.மாத்தூர், படைவெட்டிக்குடிகாடு, சோழன்குடிகாடு ஆகிய கிராம பகுதிகளில் உள்ள, பொதுமக்கள் மிகுந்த பயன் பெறுவார்கள். பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.ரமண சரஸ்வதி அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், திருச்சி கோட்ட பொறியாளர் வடிவேல், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுருளி பிரபு, உதவிக் கோட்டப் பொறியாளர் சரவணன், உதவிப்பொறியாளர் ராஜா, திமுக செந்துறை வடக்கு ஒன்றிய செயலாளர் எழில் மாறன், முன்னாள் ஒன்றிய செயலாளர் ஞானமூர்த்தி, திமுக பிரமுகர் கருணாநிதி, மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், செந்துறை வடக்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




## கேரளாவில் பட்ஜெட்டில் உயர்த்தப்பட்ட வரியை திரும்ப பெற வலியுறுத்தி போராட்டம்



கேரளா, பிப்.10–

கேரள பட்ஜெட்டில் உயர்த்தப்பட்ட வரியை திரும்ப பெற வலியுறுத்தி பாஜக, காங்கிரஸ் போராட்டம் நடத்தினர்.

கேரள சட்டசபை கூட்டத்தில் 2023-24-ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இந்த பட்ஜெட்டை முதலமைச்சர் பினராயி விஜயன் முன்னிலையில் நிதியமைச்சர் பாலகோபால் தாக்கல் செய்தார். பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதில் ரூ.3 ஆயிரம் கோடி வருவாய் கிடைக்கும் வகையில் புதிய வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கேரள பட்ஜெட்டை கண்டித்து எர்ணாகுளத்தில் இளைஞர் காங்கிரஸ் போராட்டம் நடத்தினர். பெட்ரோல், டீசலுக்கான செஸ் வரி உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் வரி உயர்வை திரும்ப பெற வலியுறுத்தி இளைஞர் காங்கிரஸ் போராட்டம் நடத்தினர். இந்நிலையில், கேரள பட்ஜெட்டில் உயர்த்தப்பட்ட வரியை திரும்ப பெற வலியுறுத்தி கோட்டயம் ஆட்சியர் அலுவலகம், கணையனூர் தாலுகா அலுவலகம் முன் பாஜக, காங்கிரஸ் கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டக்காரர்களை தண்ணீர் பீய்ச்சி அடித்து கலைக்கும் முயற்சியில் கேரள காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். கேரளாவில் முக்கிய இடங்களில் இரும்புதடுப்புகள் அமைத்து போராட்டத்தை போலீசார் கட்டுப்படுத்தி வருகின்றனர். 3-வது நாளாக கேரள மாநிலத்தின் பல்வேறு பகுதியில் எதிர்க்கட்சியினர் போராட்டம் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

### சவுகார்பேட்டையில் குடோனில்

## பதுக்கி வைக்கப்பட்ட 11.5 டன் ரேசன் அரிசி பறிமுதல் – 4 பேர் கைது

சென்னை பிப்.10–

சென்னை, சவுகார்பேட்டையில் குடோனில் பதுக்கி வைக்கப்பட்ட 11.5 டன் ரேசன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குநர் அருண் உத்தரவின் பேரில் சோதனை நடத்தப்பட்டுள்ளது. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை எஸ்.பி. கீதா தலைமையிலான போலீசார் சோதனை நடத்தினர்.

ரேஷன் அரிசியை பதுக்கி வைத்திருந்த ஜெயசிவா, முத்து, விஸ்வநாதன், ரகமதுல்லா, சரத்குமார் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். 4 பேரையும் சிவில் சப்ளை செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். ஒரு லாரி மற்றும் 2 இருசக்கர வாகனங்களை பறிமுதல் செய்து சிவில் சப்ளை சிஐடி போலீஸ் விசாரணை நடத்தி வருகின்றனர். சென்னை மற்றும் புறநகரில் ரேசன் அரிசியை குறைந்த விலைக்கு வாங்கி ஆந்திராவுக்கு கடத்தி அதிக விலைக்கு விற்றது அம்பலமாகியுள்ளது.

## புகையிலைப் பொருட்களுக்கான தடையை ரத்து செய்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு



டெல்லி பிப்.10–

புகையிலைப் பொருட்களுக்கான தடையை ரத்து செய்ததை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழ்நாட்டில் குட்கா, பான்மசாலா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களுக்கு உணவு பாதுகாப்பு துறை ஆணையர் கடந்த 2018-ம் ஆண்டு தடை விதித்து உத்தரவிட்டார். இதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் தனியார் புகையிலை நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்தன. இந்த நிலையில் ஆணையரின் உத்தரவை மீறியதாக சில நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்ற நடவடிக்கைகளும் தொடரப்பட்டன.

இதற்கு எதிராக ஐகோர்ட்டில் வேறு சில வழக்குகளும் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்குகளை கடந்த மாதம் விசாரித்த நீதிமன்றம், உணவு பாதுகாப்பு சட்டத்தில் குட்கா வரவில்லை. அவசர நிலை கருதி இது போன்ற புகையிலை பொருட்களை அதிகபட்சமாக ஓராண்டு வரைதான் தற்காலிகமாக தடை செய்ய ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. இதனால் புகையிலை பொருட்களுக்கு விதித்த தடை ரத்து செய்யப்படுவதாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருந்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசின் சார்பில் வழக்கறிஞர் ஜோசப் அரிஸ்டாட்டில் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு விரைவில் விசாரணைக்குவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### அமரடக்கியில் புல்வாமா தாக்குதலில்

## உயிரிழந்த இராணுவ வீரர்களின் 5–ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் வழங்கும் விழா



அறந்தாங்கி பிப்.10–

புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் 5-ஆம் ஆண்டு வீரவணக்க நாளை முன்னிட்டு அமரடக்கி புன்னகை அறக்கட்டளை சார்பில் 300 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அடுத்த அமரடக்கி புன்னகை அறக்கட்டளையின் தமிழ் மரம் நட்டல் திட்டத்தின் கீழ் ஆவுடையார்கோவில் ஒன்றியம், அமரடக்கி அரசு உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமரடக்கி ஊராட்சி மன்றத்தலைவர் கலையரசி ராஜா தலைமையில், பள்ளி தலைமை ஆசிரியர் மூர்த்தி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் விஸ்வநாதன், புன்னகை அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கலைபிரபு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், துணை தலைமை ஆசிரியர் கண்ணதாசன் மற்றும் ஆசிரியர் பெருமக்கள், புன்னகை அறக்கட்டளை மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ், வீரமுத்து, கண்ணன், சுதாகர், மற்றும் பலர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை வழங்கினர்.

## வியாசர்பாடியில் குடிபோதையில் தாயை பாட்டிலால் குத்திய வாலிபர் கைது

சென்னை பிப்.10–

வியாசர்பாடியில் குடிபோதையில் தாயை பாட்டிலால் குத்திய வாலிபரை காவல்துறையினர் கைது செய்தனர்.

சென்னை, வியாசர்பாடி, எம்.கே.பி. சாஸ்திரி நகரில் 11-வது தெருவில் எம்.கே.பி. நகர் காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது அங்குள்ள வீட்டின் மொட்டை மாடியில் இருந்து பெண்ணின் அலறல் சத்தம் கேட்பதாக அங்கிருந்த பொதுமக்கள் ரோந்து பணி காவலர்களிடம் தகவல் தெரிவித்தனர்.

காவலர்கள் பாரதி மற்றும் முத்து ஆகியோர் அங்குள்ள வீட்டுக்குள் விரைந்து சென்று பார்த்தனர். அப்போது ஒரு பெண் பாட்டிலால் குத்தப்பட்டு ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர். இதையடுத்து மயங்கி கிடந்த அந்த பெண்ணை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். பின்னர் காவலர்கள் அங்கிருந்த வாலிபரை மடக்கி பிடித்து விசாரித்ததில், அவர் பெயர் அஜய்(22) என்பதும், இவர் குடிபோதையில் தன்னை பெற்று வளர்த்த தாய் என்றும் பாராமல் அவருடன் ஏற்பட்ட தகராறில் ருக்மணி(43) என்பவரை மது பாட்டிலால் கை, காது, முதுகு உள்ளிட்ட இடங்களிலும் குத்தியதும் தெரியவந்தது. இதையடுத்து, அஜய்யை பிடித்து கைது செய்த காவல்துறையினர் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### நாடு முழுவதும் 12.53 லட்சம் மாணவர்கள்

## பள்ளி படிப்பை கைவிட்டுள்ளதாக மத்திய கல்வி இணை அமைச்சர் சுபாஷ் சர்க்கார் தகவல்



டெல்லி பிப்.10–

நாடு முழுவதும் பள்ளி படிப்பை கைவிட்ட மாணவ மாணவியர்கள் எண்ணிக்கை 12.53 லட்சம் என மத்திய அரசு தெரிவித்து உள்ளது.

நாடாளுமன்ற மேலவையில் உறுப்பினர்கள் பிகாஷ், ரஞ்சன், பட்டாச்சார்யா மற்றும் ரஹீம் ஆகியோர் நாட்டில் பள்ளி படிப்பை கைவிட்ட மாணவ மாணவியர்கள் எண்ணிக்கை பற்றி எழுப்பிய கேள்வி ஒன்றிக்கு மத்திய கல்வி இணை மந்திரி சுபாஷ் சர்க்கார் எழுத்து வழியாக பதில் அளித்து உள்ளார்.

அதில், நாடு முழுவதும் பள்ளி படிப்பை கைவிட்ட மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 12.53 லட்சம் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இவர்களில் மாணவர்கள் 6.97 லட்சம், மாணவிகள் 6.22 லட்சம் ஆவர். இதில், 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் 9.30 லட்சம் பேர் உள்ளனர். அவர்களில் மாணவர்கள் 5.02 லட்சம், மாணவிகள் 4.27 லட்சம் ஆவர். மாற்று பாலின மாணவர்களின் எண்ணிக்கை 32 ஆகும்.

இந்த பட்டியலில் உத்தரபிரதேசம் (3.96 லட்சம்), பீகார் (1.34 லட்சம்), குஜராத் (1.06 லட்சம்), அசாம் (80,739), அரியானா (22,841) மற்றும் தமிழகம் (20,352) உள்ளன. இந்த வரிசையில் தமிழகம் 6-வது இடத்தில் உள்ளது. 14 வயதுக்கு மேற்பட்ட 3.22 லட்சம் மாணவர்கள் பள்ளி படிப்பை கைவிட்டு உள்ளனர். அவர்களில் 1,94,350 மாணவர்களும், 1,28,126 மாணவிகளும் மற்றும் 12 மாற்று பாலினத்தவர்களும் அடங்குவர் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால், மாணவிகளை விட மாணவர்களே பள்ளி படிப்பை அதிக அளவில் கைவிட்டு உள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளிவந்துள்ளது.

2021-22-ஆம் ஆண்டில், சமூக மற்றும் பொருளாதார அளவில் பாதித்த 16 முதல் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு, பள்ளிபடிப்பைகைவிட்ட மாணவர்களுக்கு உதவிடும் வகையில் ஆண்டுக்கு ரூ.2 ஆயிரம் நிதியுதவி அளிக்கப்படுகிறது. படிப்பை நிறைவு செய்ய மற்றும் படிப்புக்கான பொருட்கள் மற்றும் சான்றிதழ்களை பெற உதவிடும் வகையில் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது என்றும் அவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கந்தர்வகோட்டை அருகே கால்நடை மருத்துவ முகாமில் விவசாயிகளுக்கு மெடல் மற்றும் பாராட்டு சான்றிதழ்



கந்தர்வகோட்டை பிப்.10–

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், நம்புரான்பட்டி ஊராட்சி ஆண்டியப்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

கந்தர்வகோட்டை அடுத்த நம்புரான்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஆண்டியப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் சிறப்பு கால்நடை சுகாதார விழிப்புணர்வு மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் 850-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் கால்நடைகளை சிறப்பான முறையில் வளர்த்த கால்நடையின் உரிமையாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் கால்நடை மருத்துவர்கள் மெடல் அணிவித்து பாராட்டு சான்றிதழ் வழங்கினர்.

இதில் குளத்தூர் நாயக்கர்பட்டி கால்நடை மருந்தகத்தின் கால்நடை உதவி மருத்துவர் செந்தில் ராஜன் ஆலோசனை வழங்கினார். ஊராட்சி மன்றத் தலைவர் ஜோதிலட்சுமி மதியழகன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார், வார்டு உறுப்பினர் சுதா சின்னப்பா, ஊராட்சி செயலாளர் சத்தியமூர்த்தி, கால்நடை ஆய்வாளர் அன்னக்கிளி முருகேசன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் புண்ணியமூர்த்தி, ரங்கம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தேர்தல் வாக்குறுதி எதையும் தி.மு.க. அரசு நிறைவேற்றவில்லை

### முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் குற்றச்சாட்டு



ஈரோடு பிப்.10–

தேர்தல் வாக்குறுதி எதையும் தி.மு.க. அரசு நிறைவேற்றவில்லை என்று ஈரோட்டில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த போது, கடந்த சட்டமன்ற தேர்தலின் போது தி.மு.க. 575 வாக்குறுதிகளை கூறியிருந்தது. ஆனால் இதுவரை எந்த வாக்குறுதிகளையும் தி.மு.க. அரசு நிறைவேற்றவில்லை. அ.தி.மு.க. ஆட்சியின் போது கொண்டு வந்த அம்மா ஸ்கூட்டர், தாலிக்கு தங்கம், மடிக்கணினி, அம்மா கிளினிக், அம்மா சிமெண்ட் உட்பட பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தி.மு.க. அரசு முடக்கி விட்டது. இந்த கோபம் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் நடைபெறும் இடைத்தேர்தலில் பிரதிபலிக்கும். ஈரோட்டில் பொதுமக்கள் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு அளிக்க தயாராகி விட்டனர். அ.தி.மு.க. வேட்பாளர் கே.எஸ். தென்னரசு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்று கூறினார்.

10.02.2023 ❖ வரலாறு



செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன்பேட்டை, வேந்தர் நகரில் அமைந்துள்ள எஸ். ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரியில் பயின்று வரும் 4 ஆம் ஆண்டு படிக்கும் மாணவிகள், ராஜசேகரன், முஹம்மத் இக்ஷனுல்லாஹ், நவின் குமார், வனிதா ஆகியோர் தலைமையில் "கிராமத்தில் தங்கி பயிர்சி பெறும் திட்டம்" என்ற திட்டத்தின் கீழ் ஒரத்தி கிராமத்தில் தங்கியுள்ளனர். இதன் கீழ் மாணவிகள் அ.ஜெ.சுருதிவர்ஷினி, ச.சிவதர்ஷினி, கி. இதழி, சிவபிரித்தி, ர.ப.ரஜஸ்ஷன்யா, ஆனந்த வர்ஷினி, ர.காவியா, பவானி, வ. நிவேதா, த.அபிதா ஆகியோர் ஐந்திலை சாறு என்கின்ற இயற்கை பூச்சிகொல்லி தயாரிப்பு முறையை குறித்து விவசாயிகளுக்கு அதன் செய்முறையை செய்து காட்டினர். ஐந்திலை ஆகிய வேப்ப இலை, நொச்சி இலை, எருக்கன் இலை, காட்டு ஆமணக்கு, ஆடாதோடை ஆகியவற்றை வைத்து ஐந்திலை சாறை பற்றி விளக்கினர், அது மற்றுமின்றி அதன் பயன்களையும், பயன்படுத்தும் முறையையும் மற்றும் அதனை சேமிக்கும் முறையையும் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

# வேலூர் குடியாத்தத்தில் திருமகள் அரசு கல்லூரியில் மாணவிகளுக்கு ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம்-மாவட்ட ஆட்சியர் ஆய்வு

வேலூர், பிப். 10 -

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் பகுதியிலுள்ள திருமகள் அரசு கல்லூரியில் மாவட்ட ஆட்சியர் பெ.குமரவேல் பாண்டியன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது மாணவிகளுக்கு ரூ.1000 உதவி தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.



இதையடுத்து குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அக்ரஹாரம் ஊராட்சியில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் அப்பகுதியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர்களின் கற்பிக்கும் மற்றும் மாணவர்களின் கற்கும் திறன் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து மாணவர்களுடன் உரையாடினார்.

இந்த ஆய்வின் போது கோட்டாட்சியர் வெங்கடராமன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கார்த்திகேயன், திருமலை உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி,

# சீர்காழி கோட்டாட்சியர் அலுவலகம், தியணைப்பு துறை அலுவலகங்களில் திடீர் ஆய்வு

சீர்காழி, பிப்.10

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி சீர்காழி வட்டத்துக்கு உட்பட்ட வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி, சீர்காழி தீயணைப்புதுறை அலுவலகம், சீர்காழி கோட்டாட்சியர் அலுவலகம், தமிழிசை மூவர் மணிமண்டபம், வட்டாட்சியர் அலுவலகம் சீர்காழி நகராட்சி அலுவலகம் உள்ளிட்ட பகுதிகளில் புதிதாக பொறுப்பேற்றுள்ள மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி திடீர் ஆய்வு மேற்கொண்டார்.



வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் பேரூர் மன்ற தலைவர் பூங்கொடி அலெக்சாண்டர் முன்னிலையில் கொத்தடிமை தொழிலாளர்கள் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

முன்னதாக வைத்தீஸ்வரன் கோவில் செவ்வாய் ஸ்தலமாக விளங்கக்கூடிய வைத்தியநாதசுவாமி கோவிலில் மாவட்ட ஆட்சியர் மகாபாரதி சுவாமி தரிசனம் செய்தார். அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பாக சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த ஆய்வில் சீர்காழி வட்டாட்சியர் செந்தில்குமார், மண்டல துணை வட்டாட்சியர் ரவிக்குமார் நகர மன்ற தலைவர் நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ஆணையர் வாசுதேவன் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# வேலூர் குடியாத்தம் தாலுகாவில் சிறப்பு மனுநீதி முகாம் மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு!

வேலூர். பிப்.10-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் அடுத்த விழுதோனிபாளையம் ஊராட்சியில் நடைபெற்ற சிறப்பு மனுநீதிநாள் முகாமில் மாவட்ட ஆட்சியர் குமரவேல் பாண்டியன் கலந்து கொண்டார். இதனைத் தொடர்ந்து இயற்கை வளங்களை உருவாக்கும் பொருட்டு மரக்கன்றுகளை நட்டு சிறப்பித்தார்.



இதில் குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் வெங்கடராமன், வட்டாட்சியர் விஜயகுமார், ஊராட்சி மன்றத் தலைவர் நாகரத்தினம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு கிழக்கில் அதிமுகவினர் அனுமதி இன்றி கூட்டம் நடத்திய திருமண மண்டபத்திற்கு சீல்

ஈரோடு, பிப். 10 -

ஈரோடு கிருஷ்ணம் பாளையம் ஜீவா நகரில் தனியார் திருமண மண்டபத்தில் அனுமதியின்றி கூட்டம் நடைபெறுவதாக பறக்கும் படை அலுவலர் மணிகண்டனுக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து மணிகண்டன் தலைமையில் அதிகாரிகள் அந்த திருமண மண்டபத்துக்கு சென்று பார்த்தனர். அப்போது அ.தி.மு.க.வினர் ஒன்றாக திரண்டு இருந்து கூட்டம் நடத்துவதற்கான ஆயத்த பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர்.



இதையடுத்து பறக்கும் படை அதிகாரி மணிகண்டன் அ.தி.மு.க. நிர்வாகிகளிடம் அனுமதியின்றி இங்கு கூட்டம் நடத்தக்கூடாது உடனடியாக கலைந்து செல்லுங்கள் என்று கூறினார். ஆனால் இதை ஏற்காமல் அ.தி.மு.க.வினர் அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்தனர். இதுகுறித்து உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் முத்துகிருஷ்ணன் மற்றும் டவுன் டி.எஸ்.பி. ஆனந்தகுமாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக அவர்கள் மண்டபத்துக்கு விரைந்து வந்தனர். அவர்களுடன் போலீசாரும் வந்திருந்தனர். இதனையடுத்து அவர்கள் அ.தி.மு.க.வினரை மண்டபத்தை விட்டு வெளியேறும்படி கூறினர். ஆனால் அவர்களுடனும் அ.தி.மு.க.வினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அதன் பிறகு அ.தி.மு.க.வினர் மண்டபத்தை விட்டு கலைந்து சென்றனர்.

ஏற்கனவே இதே மண்டபத்தில் கடந்த மாதம் 31-ந் தேதி அ.தி.மு.க.வினர் அனுமதியின்றி கூட்டம் நடத்தினர். அப்போதும் பறக்கும் படை அதிகாரிகள் வந்து அனுமதியின்றி கூட்டம் போடக்கூடாது என்று கூறி கலைந்து போக செய்தனர். தற்போது 2-வது முறையாக அனுமதியின்றி கூட்டம் கூடியதால் கூட்டம் நடந்த திருமண மண்டபத்தை அதிகாரிகள் பூட்டி சீல் வைத்தனர். மண்டபத்தில் இருந்த 2 நுழைவாயிலும் பூட்டி சீல் வைத்தனர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது.



வேலூர் மாவட்டத்தில் கல்வி உதவித்தொகை பெற விரைந்து இணையத்தில் பதிவேற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள் வேலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணாக்கர்களது போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையை பெறுவதற்கு தகுதியுடைய மாணாக்கர்களின் புதிய, புதுப்பித்தல் விண்ணப்பங்களை இணையதளத்தில் விரைந்து பதிவேற்றம் செய்ய தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் பெ.குமரவேல் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் விஜயராகவன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் இராமச்சந்திரன், கல்லூரி முதல்வர்கள் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் என பலர் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்ட ஆட்சியரகத்தில் அமைந்துள்ள ஓட்டுப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்புஅறையை காலாண்டுக்கு ஒரு முறை திறந்து ஆய்வு செய்யும் நிலையில் நேற்று காரைக்கால் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான எல்.முகமது மன்சூர் முன்னிலையில் அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன் திறந்து ஆய்வு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் வாக்காளர் பதிவு அதிகாரி ஆதர்ஷ் துணை மாவட்ட தேர்தல் அதிகாரி பாஸ்கரன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்"



புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை மூலம் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியமான முதியோர்கள் மற்றும் விதவை தாய்மார்கள் மேலும் கணவனால் கைவிடப்பட்டவர்கள் என திருநள்ளாறு தொகுதியைச் சேர்ந்த சுமார் 830 பயனாளிகளுக்கு காரைக்கால் திருநள்ளார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.சிவா தலைமையில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை அதிகாரி சத்யா முன்னிலையிலும் உதவி தொகைக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டது. மாதம் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் பெரும் குடும்பத் தலைவிகள் 400 பேருக்கும் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் பயணாளிகளுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள் ஏராளமான பயனாளிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். இரண்டொரு நாட்களில் அவரவர் வங்கிக் கணக்கில் பணம் செலுத்தப்படும் என குழந்தைகள் மேம்பாட்டு துறை அதிகாரி தெரிவித்தார்.



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி, திருவேட்டக்குடி காலனி தெரு கிராமபகுதிக்கு தார் சாலை அமைக்கும் பணியானது நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் போக்குவரத்து துறை அமைச்சர் . சந்திரபிரியங்கா பணி நடைபெறும் இடத்திற்கு நேற்று நேரில் சென்று சாலைகளை ஆய்வு செய்து சாலையின் தரம் மற்றும் பணிகளின் விவரம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்து பணிகளை விரைந்து முடிக்கும்படியும்,சாலையை மக்களின் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டு வரும்படியும் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.



திருக்கழுக்குன்றம் காவல் நிலையத்தில் புதியதாக பொறுப்பேற்றுள்ள காவல் ஆய்வாளர் இராதாகிருஷ்ணன் அதே பகுதியில் உள்ள ரெயின்போஸ் அறக்கட்டளை அலுவலகத்திற்கு வருகைப் புரிந்தார்.அவருக்கு அறக்கட்டளை நிறுவனர் செல்வகுமார், ரஜினி ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்றனர்.


## காணவில்லை

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா,மாஞ்சன்விடுதி கிராமம் புல எண்;285-2 புஞ்சை ஏர்ஸ் 0.07.0 உள்ள அசல் ஆவண எண்;2548/1975ம் புல எண்;285-5 புஞ்சை ஏர்ஸ் 0.07.5 உள்ள அசல் ஆவண எண்;2212/1978ம், மாஞ்சன்விடுதி கிராம புல எண் 300-6A மனை சதுர மீட்டர் .00550க்கான அசல் ஆவண எண்;786/1980க்கான பத்திரமும் ஆலங்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிய பெற்ற அசல் ஆவணம் புதுக்கோட்டை கடைவீதியில் கடந்த 31/01/2023 ஆம் தேதி காணாமல் போய்விட்டது. இதை இணையவழி புகார் செய்துள்ளேன். புகார் எண் CAA23021833 ஆகும். இதை கண்டெடுத்தவர்கள் தகவல் தெரிவித்தால் உதவியாக இருக்கும்.

இப்படிக்கு
அரங்குளவன் S/O கருப்பையா
மாஞ்சன்விடுதி, ஆலங்குடி தாலுகா
செல்:9500909482


இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் தலைமையில்

# உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் புதுமைப்பெண் திட்டம்

ராணிப்பேட்டை, பிப். 10 -

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு தாலுகா, ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி விருது திட்டத்தின் கீழ் அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து உயர்கல்வி பயின்று வரும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/ உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக 28 கல்லூரிகளை சார்ந்த 1534 மாணவிகளுக்கு உதவித்தொகையினை



மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி வழங்கினார்.

உடன் மாவட்ட சமூக நல அலுவலர் இந்திரா, ராஜீவ் காந்தி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, நகர மன்ற தலைவர் புவனேஸ்வரி சத்யநாதன், சுஜாதா வினோத், ஹரிணிதில்லை, லட்சுமி பாரி, முகமது அமீன், ஒன்றிய குழு தலைவர் நிர்மலா சௌந்தர், திட்ட கண்காணிப்பாளர் சீனிவாசன், கல்லூரி தலைவர் பாஸ்கர், சுமலதா பாஸ்கர், செயலாளர் கிருஷ்ணகுமார், முன்னோடி வங்கி மேலாளர் ஆலியம்மா அப்ரகர், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் வசந்தி ஆனந்தன், மாவட்ட கல்வி அலுவலர் உஷா, கல்லூரி முதல்வர் விஜயலட்சுமி மற்றும் மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# காட்பாடி ஆக்ஸிலியம் கல்லூரியில் புதுமைப்பெண் இரண்டாம் கட்ட திட்டம்

## மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்து ரூ.1000 வழங்கினார்

வேலூர், பிப். 10 -

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காட்பாடி ஆக்ஸிலியம் மகளிர் கல்லூரி வளாகத்தில் புதுமை பெண் திட்ட பயனாளிகளுக்கு ரூபாய் ஆயிரத்திற்கான காசோலைகளை வழங்கி மாவட்ட ஆட்சியர் பெ.குமரவேல் பாண்டியன் தொடங்கி வைத்தார்.



இந்நிகழ்ச்சியில் அருண் நர்சிங் கல்லூரி மாணவிகள் மற்றும் குடியாத்தம் திருமகள் ஆலை கல்லூரி மாணவிகள் வரிசையாக நின்று காசோலைகளை பெற்றுச் சென்றனர். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த், வேலூர் மாநகராட்சி துணை மேயர் எம். சுனில்குமார், மாநகராட்சி ஒன்றாவது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ப.திட்டா சரவணன், விமலா சீனிவாசன், சித்ரா மகேந்திரன், கல்லூரி முதல்வர் ஜெய சாந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கலைமகள் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி 40 ஆம் ஆண்டு விழா

தரங்கம்பாடி , பிப். 10 -

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா ஆக்கூரில் உள்ள கலைமகள் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 40 ஆம் ஆண்டு விழா மாணிக்க விழாவாக கொண்டாடப்பட்டது. இரண்டு நாட்கள் நடைபெறும் விழாவில் முதல் நாள் மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.



கல்வியின் முக்கியத்துவம் மற்றும் சமத்துவத்தை வலியுறுத்தும் விதமாக பேரணி நடைபெற்றது. பேரணியை கலைமகள் கல்வி நிறுவனங்கள் நிர்வாகக் குழு உறுப்பினர் செந்தமிழ் செல்வி கலந்து கொண்ட துவங்கி வைத்தார். அதைத்தொடர்ந்து தொலைக்காட்சி புகழ் நகைச்சுவை இயக்குனர் எஸ்.பி.பாஸ்கரின் சிறப்புரையும் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் நெடுஞ்செழியன், செயலர் ஜெயபிரகாசம், நிர்வாக குழு இயக்குனர் என்.எஸ். குடியரசு மற்றும் நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பங்கேற்றனர்.

# ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை பாதயாத்திரை விழாவை முன்னிட்டு காங்கிரஸ் கட்சி சார்பில் கொடி ஏற்றும் நிகழ்ச்சி

செங்கல்பட்டு, பிப். 10 -

செங்கல்பட்டு மாவட்டம், சித்தாமூர் வட்டார காங்கிரஸ் கமிட்டி சார்பில் இளம் தலைவர் ராகுல் காந்தி இந்திய ஒற்றுமை பாதயாத்திரை விழாவை முன்னிட்டு காங்கிரஸ் கட்சி சார்பில் கொடி ஏற்றும் நிகழ்ச்சி சித்தாமூர் வட்டார தலைவர் சிவா தலைமையில் சித்தாமூர், சூனாம்பேடு, நுகும்பல், கீழ்மருவத்தூர், இரும்புலி புத்திரன், கோட்டை, மழுவங்கறனை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது.



இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு தெற்கு மாவட்ட தலைவர் சுந்தரமூர்த்தி கலந்து கொண்டு காங்கிரஸ் கட்சி கொடியை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொதுச் செயலாளர் மகாலிங்கம் ஆகாஷ் மற்றும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனை ஆதரித்து ஈரோடு மாநகராட்சி 53 வது வார்டு கோண வாய்க்கால் பகுதியில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர், மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம். முருகன், குத்தாலம் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜா, செம்பனார்கோவில் ஒன்றியம் அப்துல்மாலிக்,சீர்காழி ஒன்றிய செயலாளர் பிரபாகரன், பஞ்ச் குமார், சீர்காழி நகர செயலாளர் சுப்புராயன்,மயிலாடுதுறை ஒன்றியம் இளையபெருமாள், இமய நாதன், மூளூர் மூர்த்தி, முருகமணி மயிலாடுதுறை, நகர செயலாளர் குண்டாமணி என்கிற செல்வராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ரவி, செம்பனார்கோவில் மத்திய ஒன்றிய செயலாளர் அமுர்த. விஜயகுமார். மயிலாடுதுறை தொகுதி வழக்கறிஞர்கள் ஆகியோர்கள் மற்றும் ஈரோடு மாநகர காங்கிரஸ் நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 35–ஆம் ஆண்டு விருது வழங்கும் விழா




புதுக்கோட்டை பிப்.10-

புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 35-ஆம் ஆண்டுவிருதுவழங்கும் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு எஸ்.ஆர். குழுமங்களின் இயக்குனர் இராமச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும், மௌண்ட் சீயோன் பள்ளியின் முன்னாள் மாணவர் பாலசண்முகம் சிறப்பு அழைப்பாளராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியானது மௌண்ட் சீயோன் பள்ளி குழுமங்களின் துணைத் தலைவர் ஏஞ்சலின் ஜோனாத்தனின் இறை வழிப்பாட்டுடன் துவங்கியது. மௌண்ட் சீயோன் பள்ளி குழுமங்களின் தலைவர் ஜோனத்தன் ஜெயபரதன் விருந்தினர்களை வரவேற்று பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசினை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர் பேசுகையில், பிரபல எழுத்தாளர் சோமர் செட்மகாம் 'திவெர்ஜர்' என்ற சிறுகதையினை உதாரணம் கூறி கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார் .மேலும் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். அப்துல்கலாம் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வினைக் கூறி,தோல்வியைக் கண்டு துவண்டு விடக்கூடாது என்றும், அவற்றிலிருந்து மீண்டு வெற்றிப் பாதையை நோக்கி முன்னோக்கிச் செல்ல வேண்டும் என வலியுறுத்தினார். விடா முயற்சி, தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பு மட்டுமே ஒரு மனிதனை வெற்றியாளராக ஆக்கக்கூடிய தகுதிகள் எனக் கூறினார். மேலும் திருக்குறளை மேற்கோள் காட்டி, ஒரு மனிதன் பெற்ற கல்வி அவனுக்கு அப்பிறப்பு மட்டுமல்லாது, ஏழுபிறப்பிற்கும் பயனளிக்கக் கூடிய ஒரு செல்வம் எனக் கூறினார்.

இன்றைய தலைமுறையினர் பெற்றோர்களை முதுமைக் காலத்தில் கவனித்துக் கொள்வதுடன், வீட்டில் உள்ள பெரியவர்களை மதித்து இறைவனின் அருளைப் பெற வேண்டும் எனக் கூறினார். தம் உரையில் இறுதியாக மாணவர்கள் கல்வியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதோடு, தங்கள் மனதையும், உடலையும் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என மாணவர்களிடம் கூறி முடித்தார்.

நிகழ்ச்சியின் நிறைவாக பள்ளி கல்வி முதல்வர் குமரேஷ் நன்றியுரை வழங்கினார். பள்ளியின் நிர்வாக முதல்வர் கிருபா ஜெபராஜ் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



அகில இந்திய கட்டுனர் புதுக்கோட்டை மைய முன்னாள் தலைவரும் அரசு ஒப்பந்தக்காரருமான எம்.ரமேஷ் குமார் இல்ல காதணி விழாவில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர், தொழிலதிபர் முத்துப்பட்டினம் ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு காதணிச்செல்வன் ஆதித்யாவை வாழ்த்தினர்.

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் அதிமுக வெற்றி பெற அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம்–அண்ணாமலை பேட்டி

ஈரோடு பிப்.10-

அதிமுக வேட்பாளர் கே.எஸ்.தென்னரசுவை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள உள்ளதாக அண்ணாமலை கூறினார்.



பாஜக மாநில தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில், ஈரோடு கிழக்கில் அதிமுக வேட்பாளர் நிச்சயம் வெற்றி பெறுவார். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இடைத்தேர்தலில் முதலமைச்சர் சூறாவளி பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்.

இது ஒரு சாதாரண இடைத்தேர்தல், திமுக-வினர் அனைவரும் ஈரோடு கிழக்கில் தான் உள்ளனர். ஒரு ஆளுங்கட்சி, இடைத்தேர்தலுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது தமிழக வரலாற்றில் நடைபெற்றது கிடையாது. இதில் இருந்தே திமுக பயந்துள்ளது தெரிய வந்துள்ளது. திமுக வேட்பாளர் பேசினாலே எங்கள் பக்கம் தானாக வாக்குகள் வந்து சேர்ந்துவிடும். அதிமுக வேட்பாளர் கே.எஸ். தென்னரசுவை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளோம் என்று கூறினார்..

## 12–வது சர்வதேச அபாகஸ் சேம்பியன்ஷிப் போட்டியில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பள்ளி மாணவர்கள் சாதனை

புதுக்கோட்டை பிப்.10-

சென்னையில் உள்ள அபாகஸ் மற்றும் மென்டல் அரித்மெடிக் டீச்சர்ஸ் அசோஷியேஷன் 12-வது சர்வதேச அபாகஸ் போட்டியினை ஆன்லைனில் நடத்தியது.



8 பிரிவுகளாக நடைபெற்ற இப்போட்டியில் புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் முதல் மூன்று பிரிவுகளில் கலந்து கொண்டு சர்ஜீத்பாபு, மோகித் கிஷோர், ஹேமசுதன், லோகித், ரம்யா, ஷிவானி, உதயரிஷ்னியா, சர்வேஷ்வரன், லோகமித்ரா ஆகியோர் சேம்பியன் ஆப் பட்டமும், ஹர்ஷினி சேம்பியன் பட்டமும், சஞ்சீத் பாபு டாப்பர் பட்டமும் வென்றனர்.

இப்போட்டியில் வென்று சான்றிதழும், பரிசும் பெற்ற மாணவர்களை பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி, பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல், அபாகஸ் பயிற்சியாளர் புவனேஸ்வரி பாண்டியன், ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பாராட்டினார்கள்.

## ஆய்க்குடி அமர்சேவா சங்கத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



தென்காசி பிப்.10-

தென்காசி மாவட்டம், ஆய்க்குடி அமர்சேவா சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வருகை தந்த தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவுக்கு தென்காசி மாவட்ட செயலாளர் பத்மநாபன், மாவட்ட ஆட்சித் தலைவர் ரவிச்சந்திரன் ஆகியோரால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆய்க்குடி அமர்சேவா சங்க நிர்வாகிகள் கோரிக்கையை ஏற்று நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்ச்சிக்கு ஆய்க்குடி பேரூராட்சி மன்ற தலைவர் தனது தொகுதிக்குட்பட்ட 1-வது வார்டு வெள்ள நதியான் பொத்தையில் சுமார் 20-ஏக்கர் அரசு நிலம் உள்ள நிலையில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க கோரிக்கை மனுவை முன் வைத்தார்.

நிகழ்ச்சியில் சுந்தர்ராஜன் பேரூராட்சி மன்ற தலைவர், மாரியப்பன் துணைத் தலைவர், விமலா, ராணி, புனமாலை, நமச்சிவாயம், கார்த்திக், சோபா, சிந்து, அருள், வளர்மதி, இலக்கியா, சுரேஷ், வில்லியம் பெர்னாட்ஷா, வளன்அரசு, சிதம்பரம், காளிதாஸ், ஆறுமுகம், சங்கரசுப்பு, முத்துக்குமார், மாடசாமி, மாரியம்மாள், கடையநல்லூர் திமுக நகர செயலாளர் அப்பாஸ், அவைத்தலைவர் முருகையா, 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் தனலட்சுமி, 26-வது வார்டு செயலாளர் தனலட்சுமி, சங்கீதா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மணமேல்குடி அருகே அரசுப்பேருந்தை சிறைபிடித்து பொதுமக்கள் சாலை மறியல் – ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு

அறந்தாங்கி,பிப்.10-

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி அருகே மணலூர் ஊராட்சிக்குட்பட்ட கீரனூர் கிராமத்தில் அரசுப்பேருந்தை சிறை பிடித்து பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அறந்தாங்கியிலிருந்து மணமேல்குடி வரை தினசரி காலை 6 மற்றும் 7:30 மணிக்கு இயக்கப்படும் 19ம் நம்பர் டவுன்பஸ் மூன்று மாதத்திற்கு மேல் காலை நேரத்தில் இயக்கப் படாததால் பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்கள் கூலி வேலை மற்றும் மருத்துவமனைக்கு செல்லக்கூடிய பெண்கள் முதியோர்கள் மிகவும் சிரமப்படுவதாகவும், இது தொடர்பாக பலமுறை புகார் அளித்தும் பணிமனை நிர்வாகம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காததால் ஆத்திரமடைந்த அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பேருந்தை சிறை பிடித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவலின்பேரில் சம்பவ இடத்திற்கு வந்த மணமேல்குடி காவல் ஆய்வாளர் குணசேகர் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, பேருந்து தினசரி காலை நேரத்தில் இயக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததன் பேரில் போராட்டம் கைவிடப்பட்டது சாலை மறியல் போராட்டத்தால் அப்பகுதியில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## ஆவுடையார்கோவில் அருகே குன்னூர் கிராமத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ முகாம்

ஆவுடையார்கோவில் பிப்.10-

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் ஒன்றியம், குன்னூர் ஊராட்சியில் உள்ள கு.பள்ளத்திவயல் கிராமத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் இலவச மருத்துவ முகாம் குன்னூர் ஊராட்சி மன்ற தலைவர் காளிமுத்து தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள், கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும் உடல் பரிசோதனை செய்து மருந்துகளும் வழங்கினர்.



ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர், ஊராட்சி செயலாளர், ஊராட்சி மன்ற துணைத் தலைவர், ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், துப்புரவு பணியாளர்கள் உட்பட 200-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் விராட்டிபத்து கிராமத்தில் ஸ்ரீ கணபதி, ஸ்ரீ சுப்பிரமணியர் திருக்கோவிலில் அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகமும், ஆலய திருப்பனையும் நடைபெற்றது, அவ்வமயம் பக்த கோடிப் பெருமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிவ அனுக்கிரகமும், சிவச்செல்வர்களுடைய கிருபையும், அருளையும் பெற்று சென்றனர், அதனை தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றது.

## கந்தர்வகோட்டையில் வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம்

கந்தர்வகோட்டை பிப்.09-

கந்தர்வகோட்டை வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம் வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.



வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன், வேளாண்மை அலுவலர் ஜெயவேலன், தோட்டக்கலை அலுவலர் கௌசல்யா, துணை வேளாண்மை அலுவலர் முருகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்வன், சங்கர், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜிவ், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா, சுப்பிரமணியன், அட்மா தலைவர் ராஜேந்திரன் மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கந்தர்வகோட்டை துணை வேளாண்மை அலுவலர் முருகன் அனைவரையும் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் அன்பரசன் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தில் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சி, கண்டுணர்வு பயணம் மற்றும் செயல் விளக்கங்கள் பற்றி மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் ஜெயவேலன் மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டம் பற்றி கூறினார். அட்மா தலைவர் ராஜேந்திரன் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி வலியுறுத்தினார். தோட்டக்கலை அலுவலர் கௌசல்யா கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டங்கள் மற்றும் தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி பேசினார். உதவி வேளாண்மை அலுவலர் சங்கர் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டங்கள் மற்றும் உழவன் செயலி பற்றி எடுத்துக் கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜிவ் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி கூறினார்.

வட்டார விவசாய ஆலோசனை குழு உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். கந்தர்வகோட்டை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜிவ் நன்றி கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் பயிற்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

## அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நலப்பணி திட்ட மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் விழா

அறந்தாங்கி பிப்.10-

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா, பெருநாவலூரில் இயங்கிவரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாட்டு நல பணி திட்ட மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கல்லூரிமுதல்வர் ரேணுகாதேவி தலைமை தாங்கினார். சீருடையை அறந்தாங்கி ஆடிட்டர் தங்கதுரை 300 மாணவ மாணவியர்களுக்கு அன்பளிப்பு செய்தார். இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் சண்முகம் கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தி பேசி சீருடைகளை வழங்கி சிறப்பித்தார்.




நிகழ்விற்கான வரவேற்புரையை ரமேஷ் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் வாசித்தார். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் செந்தில்குமார் நன்றி உரையை கூறினார். விழா ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட மாணவ மாணவிகள் செய்திருந்தனர்.

## ஜனாதிபதி திரௌபதி முர்மு 18–ந் தேதி மதுரை வருகை

மதுரை பிப்.10-

ஜனாதிபதி திரௌபதி முர்மு வருகிற 18-ந் தேதி மதுரை வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு வருகிற 18-ந் தேதி வர உள்ளதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, வருகிற 18-ந் தேதி மகா சிவராத்திரி தினத்தன்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. அன்றைய தினம் அவர் டெல்லியில் இருந்து தனி விமானத்தில் புறப்பட்டு, மதுரை விமான நிலையம் வருகிறார். மதியம் 12 மணிக்கு மேல் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்கிறார்.

பின்னர் விமான நிலையம் சென்று கோவை செல்கிறார். அங்கு ஈஷா மையத்தில் நடக்கும் மகா சிவராத்திரி விழாவில் கலந்து கொள்ள உள்ளதாக தெரிய வருகிறது. இதுகுறித்து காவல்துறை உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது, ஜனாதிபதி வருவதாக தகவல் வந்துள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தி வருகிறோம். ஆனால் அவர் வருவது குறித்த தகவல் ஓரிரு தினங்களுக்கு முன்பு தான் உறுதி செய்யப்படும்.

ஆனாலும் நாங்கள் இப்போது இருந்தே பாதுகாப்பு முன் ஏற்பாடுகளை தொடங்கி உள்ளோம்" என்றார். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு கடந்த 2021-ம் ஆண்டு பிரதமர் மோடி வருகை தந்தார். தற்போது, ஜனாதிபதி திரௌபதி முர்மு, மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வருவது குறிப்பிடத்தக்கது. அவர் ஜனாதிபதியாக பதவி ஏற்றபின் மதுரைக்கு முதன்முறையாக வருவதும் குறிப்பிடத்தக்கது.

## சிலம்பம் போட்டியில் சிங்கப்பூரில் தங்கம் வென்ற பள்ளி சிறுவன்




சிங்கப்பூரில் செயின்ட் ஜார்ஜ் அவன்யூவில் நடைபெற்ற உலக அளவிலான சிலம்ப போட்டியில் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, இந்தியா ,போன்ற நாடுகளில் இருந்து 180 பேர் கலந்து கொண்டனர். இதில் சைதாப்பேட்டை தம்பு சாமி சிலம்பம் அசோசியேஷன் ஆசான் எம் ராகுலிடம் சிலம்பம் கற்றவரும் .சென்னை கோபாலபுரம் டிஏவி பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்து வரும் சிறுவன் அனிருத் சாய் கார்த்திக் சிங்கபூரில் நடந்த சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டார்.இதில் வெற்றி பெற்ற அனிருத் சாய் கார்த்திக் தங்கபதக்கம் வென்றார். சென்னையில் இருந்து சென்றவர்களில் இவர் மட்டுமே பதக்கம் வென்றது குறிப்பிடத்தக்கது.இவர் மக்கள் மருத்துவர் ஜெயசந்திரன் மகள் வழி பேரன் ஆவர், இவருக்கு ஆசிரியர்கள் சிலம்பம் ஆசான் ,பெற்றோர்கள், நண்பர்கள், உறவினர்கள் உட்பட பலர் வாழ்த்துகள் தெரிவித்தனர்.

## ஆலங்குடியில் மின்சாரம் தாக்கி 3 பேர் படுகாயம்

ஆலங்குடி பிப்.10

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி பாத்தம்பட்டி முக்கம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டிடத்தில் கட்டிட வேலை பணியில் ஆலங்குடி கட்டிட உரிமையாளரான சத்தியமூர்த்தி நகர் பகுதியைச் சேர்ந்த மாணிக்கவேல் என்பவரது மகன் கோவிந்தன்(26), கல்லாலங்குடி பகுதியைச் சேர்ந்த முத்து என்பவரது மகன் மாயழகு(39), அதே பகுதியைச் சேர்ந்த ரங்கசாமி என்பவரது மகன் முருகன்(40) ஆகியோர் ஈடுபட்டு வந்துள்ளனர்.



இந்நிலையில், இரும்பு ஏணி உதவியுடன் கட்டிடத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடும் போது எதிர்பாராத விதமாக இரும்பு ஏணி உயர் அழுத்த மின் கம்பியின் அருகே செல்லும் பொழுது மின்சாரம் பாய்ந்தது. இதில் பலத்த காயமடைந்த மூவரும் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் ஆலங்குடி பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# சேற்றை வாரி இறைக்க இறைக்க தாமரை மலர்ந்து கொண்டே இருக்கும்

# ஆலங்குடியில் மின்சாரம் தாக்கி 3 பேர் படுகாயம்





# சீனாவின் உளவு பலூன் இந்தியாவையும் உளவு பார்த்துள்ளதாக தகவல்


| சென்னை / புதுக்கோட்டை | 10.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

தர்பாரா சிங் , பஞ்சாபின் முன்னாள் முதலமைச்சர் (பி.1916) (இ.1990)



சு. ராஜம் , தமிழக ஓவியர், திரைப்பட நடிகர் (பி.1919) (இ.2010)



நாஞ்சில் கி. மனோகரன் , தமிழக அரசியல்வாதி (பி.1929) (இ.2000)



தா. கிருஷ்ணன் , தமிழக அரசியல்வாதி (பி.1937) (இ.2003)



## இன்றைய நினைவு நாள்

யூகி மைக்கேல் அந்தொனியாடி , கிரேக்க-பிரான்சிய வானியலாளர், சதுரங்க வீரர் (பி.1870) (இ.1944)



என். கோபாலசாமி அய்யங்கார் , இந்திய அரசியல்வாதி (பி.1882) (இ.1953)



கே. தவமணி தேவி , இலங்கை-இந்தியத் திரைப்பட நடிகை (இ.2001)



கிரீஷ் புத்தன்சேரி , மலையாளத் திரைப்பாடலாசிரியர் (பி.1957) (இ.2010)

